Kovileor Digital Library

ரமண மஹார்ஷி



திருவண்ணுமலே
1939

45885
A.CC.NO. 45885

Koviloor Digital Library

* ரமண மஹர்ஷி

ம-ா-ா-ஸ்ரீ ராமவர்ம அப்பன் தம்புரான் திருமனஸ்ஸவர்கள் எழுதியது

மனதின் கொந்தளிப்புக்கு மோய்வுக்கு மந்தமின்று. அதன் நிக்கிரகானுக்கிரக சக்திக்கு மெல்லை யில்லை. சுகதுக்கங்களுக்கும் போகமோக்ஷங் களுக்கு மதுவே காரணம். மனதின் மூலத்தையும் விகாரங்களையு மறிந்தால், இவ்வுலகில் ஜாக்கிரத வஸ்தையாக நாம் பிரமிக்கும் மாயா சொப்பனத்தி னுண்மை யுருவத்தை யறியலாகும். சம்ஸாரம் மன தின் விளைவன்றி வேறொன்று மன்றெனத் தெரிந் தால் ஜீவனுடைய பிறப்பிறப்புத் தொடர்புந் தெரிந்ததாகும்.

"मनएव मनुष्याणां कारणं बन्ध मोक्षयो:"

"மனதே மனிதர்களின் பந்தமோக்ஷ காரணம்"

"यानिशा सर्व भूतानां तस्यां जागर्ति संयमी" [भ. गीता]

"எல்லா வுயிர்க்கு மிரவா யுள்ளதில்,
ஒடுங்கினமனத்த னுணர்வோ டுள்ளான்."

[ப. கீதை]

இத்தகைய அனுபவத்தால் மாத்திர முணரக்கூடிய நூற்றுக்கணக்கான பிரமாண வாக்கியங்களால் நிர் ணயிக்கப்படுவதும் இம் மனதின் உண்மை இயல்பே.

துக்கத்தைப் போக்கி யின்புற்றிருக்க விரும் பாதா ரில்லை. அதற்காகப் பாடுபடுபவரு மில்லா தில்லை. மனதின் போக்கு போக்கின்மைகளைக்குறித் தாராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளுக்குங் குறை வில்லை. ஆனல், மனதின் றன்மையை விசாரிக்க வேண்டியது பிறனிடத்தன்று தன்னகத்திலென் றும், இன்பதுன்பங்கள் தன்னுலுண்டாக்கப்படுவன வே யென்றுந் தெரியுமவ ரரியர். ஆத்மதத்வத்தை யாய்பவர் சிலரே ; அறிபவரோ அவரினு மிகச்சிலர்.

* இது மலையாளத்தி னநுவாதம்.

Koviloor Digital Library

" यततामपि सिद्धानां कश्चिन्मांवेत्ति तत्त्वत : "

[भ. गीता]

" எத்தனிக்துஞ் சித்தர்களிலும் ஒருவ

னுண்மையி லென்னை யுணர்கின்றன்." [ப. கீ.]

என்றல்லவோ ஸ்ரீ பகவானது அருள்வாக்கு. அது வேறுபடாது.

அத்யாத்ம மார்க்கம் வெகு கடினமும், எளிதிலடையக்கூடாததுமாம். இம்மார்க்கமன்றி யந்தமிலின்ப மேனிலையடைய வேறு வழியுமில்லை. ஆத்மஞானமடைய முயல்பவருக்கு மனவொடுக்கம் இன்றியமையாத சாதனம். யோக முறையில் யம (இந்திரிய நிக்ரக)த்தை அடிப்படையா யெடுத்ததற்கு மதுவே காரணம். யோகசித்தி யடையாமல் ஐச்வர்ய சித்தி பெறமுடியாது. சித்தர்களும்கூட ஆத்மஞானமடையாமலிருக்கலாம். அங்ஙனமிருக்க, அதையடைந்தவர் பெருமையை வழுத்துவ தெவருக்குத்தான் விழுப்பந் தராது?

ரமண மகர்ஷிக்கு ஆத்மஞானம் திடீரென்று தித்தது; ஞான தீபம் மின்சார விளக்கைப்போல் க்ஷணத்தில் ப்ரகாசித்தது. கர்மபரிபாக காலம் வந்ததும் முற்பிறப்பின்நல்வினை, வாஸனரூபமா யுள்ளடங்கியிருந்த ஆத்மசிந்தனையின் பரிபக்குவ பலத்தை எளிதி லனுபவசாத்திய மாக்கியது. தற்செயலாய் நேர்ந்த ஸ்ரீ அருணசலேசாதி திவ்யநாம சிரவணமும் அதைத்தொடர்ந்து உண்டான மரண ஸாக்ஷாத்காரமும் வறிது முன்னுதித்த ஓர் நிமித்த மாத்திரம்; ஆத்ம தீபத்தைப் பிரகாசிப்பித்தற் காயதோர் உபாயம். மின்சார விளக்கில் கம்பி மூலம் அந்த திவ்யசக்தி பற்றிப்பாய்வதுபோல், ஜடவுடலிற் படிந்துள்ள ஜீவநாடியில் ஆத்ம சைதன்யம் விளங்கிற்று. தேகத்தின் வேருக தேகியுணர்வுற்றது.

Koviloor Digital Library

ஸம்஺ார சக்கிரச் சுழலினின்று (விடுபட்டு) மையத்தைச்சேர அவருக்கு சாதன சாமக்கிரி சஞ்சாரகஷ்டம் முதலான எதுவும் தேவையாக வில்லை. ஜகதீசன் அவரைத் திருக்கரத்தாலெடுத்து ஸச்சிதானந்த நிலையிலிருத்தினர். கண் திறந்ததும் ஜகத்தை ஒளி மயமாய்க் கண்டார். "நிர்மல தேசவாசம், ஜனக் கூட்டத்தில் நிராசை, ஆத்ம ஞான நிலை, ஞானபலந் தேர்தல்," முதலிய ஞான லக்ஷணங்கள், இமைப்பொழுதில் நித்ய முக்தரான அப்புண்ணிய புருஷரைப் பணியாளர்போலப் பின் தொடர்ந்தன. முற்பவப் புண்ணிய வித்து முளைத்தது தன்னுட்டிலாயினும் வளர்ந்து பழுத்தது ஸ்ரீ அருணசல ஸ்தலச் சாரல்களிலேயே. பரிசுத்த வித்து, அருணசல புண்ய பூமி, ஈசுவர கடாக்ஷாம்ருத நீர்வார்ப்பு, தவவலியாற் பாதுகாப்பு, இவையுற்ற அக்ஷயவட விருக்ஷம் வேர் நிலைபெறவும், திவ்ய பலநிறைவுறவும் வேறு சாதனங்களும் வேண்டுமோ?

எக் கொடுங்காற்றே யடிக்கட்டும்; கடல் கொந்தளிக்கட்டும்; பூமி குலுங்கட்டும்; அருணகிரி யுச்சியில் வேரூன்றிய அவ் விஞ்ஞான விருக்ஷத்திற்கசைவில்லை. அநேக உலக வழிப்போக்கர் அதன் நிழலிலமர்ந்திளைப்பாறுகின்றனர். அதன் கிளைகளிலிருந்தெண்ணறும் பக்தப் புட்கள் கானஞ் செய்கின்றன. இதுவன்றோ வைகுண்டம்!

லக்ஷ்யம் ஒன்று, காணுங் கோணங்கள் பல; அடையுமிடமொன்று, அதற்குள்ள படிகள் பல. லக்ஷ்யம் நாடுங் கண்கட்குப் பார்வையில்லை. மார்க்கங்களோ இருள்மயம். மஹான்கள் சஞ்சரித்த பாதைகள், அறிதற்கரியனவும் வேறுபட்டனவுமாம். இன்ப துன்பம், தர்மாதர்மம் (நல்வினை, தீவினை), கர்மாகர்மம் (வினை, வினையன்மை) இவைகளைப் பகுத்தறிந்து வாழ்க்கை நடத்துவது

Koviloor Digital Library

கடினம். மாயை வலையிற் படாமல் சாமான்னியரால் ஓாடிவைத்தேற முடியாது. தேகமோ பிணியாற் பீடிக்கப்படுவது; மனதோ ஸதா சலிப்பது; புத்தியோ குறுகியது.

"यत्तदग्रेविषमिव परिणामेऽमृतोपमम्" [भ. गीता]

"எது முதலில் விடம்போலும்
முடிவிலமுதம் போலும்." [ப. கீதை.]

என்று கூறியுள்ளது வீணல்ல. ஸத்தாகிய ஒன்றைப் பலவாகவும் பல விதங்களாகவும் பார்ப்பது அதிசயமல்ல. இந்த சுகமும், அந்த துக்கமும் அனுபவித்தவரறிவர்; அனுபவிக்கிறவர் மட்டுமே யறிவர். இவ்வொரு விஷயத்திலேயே ரமண மகர்ஷி சரித்திரப் போக்கி லோர்தனி விசேஷம் உள்ளது. கருணை பொழியுங் கடைக்கண் பார்வையாலருள்செய்து அருணசலேசுவரர் அந்தப் புண்ய புருஷரைக் கரதலங்களிலேந்தி, ஆனந்தவுலகத்திலாசனத்திற்பாதியளித் தமர்த்தியபொழுதே விழித்தார்; ஒளி கண்டார். கீழ் நோக்கி யிரக்க முறுவதன்றி மேனோக்கி யேக்கமுற நேரவில்லை.

அக்காரணத்தாற்போலும் மகர்ஷியின் வாக்குகளில் ஞான வழிகளை விளக்குவதிலும் பெரும்பாலும் ஞானபலத்தை சாதிப்பது—சாதனங்களினும் சாத்தியத்திற்கு விசேஷங் கொடுப்பது—காணப்படுகின்றது. அஷ்டாங்க யோகம் அஷ்ட ஐசுவர்ய சித்திக்கே யுற்ற லௌகிகஸாதன மென்றவரெண்ணுகிறாரா வெனலும் சந்தேகமே; முக்தி பெறுதற்காம் அத்யாத்ம மார்க்கமென்றே அவர் கருதுகிறார். யோகத்தின் முடிவான பயனும் அதுவே யன்றோ? அன்றேல், அது விடுதலை வழியாகாது; வினைக்குரிய வழியே யாகும். ஆசை—நிராசை, இவை வெவ்வேறு. பந்தத்தினின்று எங்ஙனம் விடுதலையடுக்கும்? பக்தி சிரத்தையோடு கூடிய

Koviloor Digital Library

ஜிஜ்ஞாசுக்களும் முமுக்ஷுக்களுமே அவருபதேசத்திற் கதிகாரிகளாவர். ஆத்மபோதம் அனுபவத்திற் கல்லாது பாண்டித்யத்திற்கு வசப்படாது. ஆத்மஞானிகளான ஆசார்யர்களின் ரகசிய தத்வோபதேசங்கள் பண்டிதர்களின் யுக்தி வாதங்களினும் தெளிவாயும் எளிதிற் கொள்ளத்தக்கதுமாயுள்ளது —அவை நிர்மல மனத்திற்பட்ட சுத்த சைதந்நியப் பிரகாசமும், மற்றவை புத்திவிலாசத்தோடு கூடின அஞ்ஞானநடனங்களு மாவதனாலேயாம். மகர்ஷிக்குப் பரிபூர்ண ஆத்மஞான முதித்து அகந்தையகன்றதுடன், வித்வத்வம் விஞ்ஞான அங்கமாக இயல்பி லெய்தியது. ஞானசூர்ய னுதித்து ஜகம் முழுவதும் உள்ளங்கை நெல்லிக்கனி யெனத் தெளிந்து, ஒன்றை யெல்லாவற்றிலும், எல்லாவற்றை யொன்றிலுங் காண்பவர்க்கு ஓர் மறைபொருள் — ரகசியமானதோர் தத்துவம் — உண்டோ? ஜகத்திலுள்ள சகல சாராம்சத்தையும் ஒரே எட்டில் பார்ப்பவருக்கு மனப்பொருத்தமான உதாரணங்களுக் கருமையுண்டோ? கலைஞருங் கவிகளுமெங்கே, அறிஞனு மருட்கவியு மெங்கே!

அடைக்கலம் புகுந்த துக்கிகளின் துக்கங்களும், ஞானத்தை நாடுபவர் சந்தேகங்களும், பரீக்ஷிக்கவரு மவிசுவாசிகளி னவநம்பிக்கைகளும், செருக்குற்றோன் கர்வமுங்கூட மகர்ஷியின் சந்நிதி மாத்திரத்தால் நசித்துப்போகின்றன. அவரது தூய்மைவாய்ந்த வாசஸ்தலம், சாந்தமும் ஆத்மானந்தந் தருஞ் சமாதியைக்கூட அளிக்கவல்லதுமாம்.

"चित्रंवटतरोर्मूले वृद्धाश्शिष्या गुरुर्युवा !
गुरोस्तु मौनं व्याख्यानं शिष्यास्तु छिन्नसंशयाः ॥"

"ஆச்சரியம்! ஆலின்கீழ் சீடர் கிழவர், குரு சிறுவன்;
குருவுரை மௌனம், சீட ரைய்மகன்றனர்."

ஞானவடிவனான தக்ஷிணாமூர்த்தியின் அந்த திவ்ய

Koviloor Digital Library

சக்தி மகர்ஷியினுள்ளிருந்து வேலை செய்வது, என் போன்ற பக்தபரமாணுக்கள் கண்டு அனுபவித்து அறிந்த விஷயம். அத்தகைய மஹிமை பொருந்திய வர் சரித்ராம்ருதத்தை யருந்த ஆவலுறாதார் யாவர்?

“ निवृत्ततर्षैरुपगीयमानात भवौषधाच्छ्रोत्रमनोभिरामात ।
कउत्तमश्लोक गुणानुवादात पुमान विरज्येत विनापशुघ्नात् ”॥

[भागवतम्]

“ ஆசை யற்றவராற் போற்றப்படுவதாலும், பிறவிக்கு மருந்தாதலாலும், செவிமனங்கட் கின் பீவதாலும், புருஷோத்தமன் புகழா மிதை, தன் நன்மையைக் கருது மேவன்றன் விரும்பான் ”

[ஸ்ரீ பாகவதம்]

யோகேசுவரனுன பார்த்தசாரதியின் குணகீர்த் தனம்போல் மகர்ஷியின் மஹிமையைச் சாற்றுதல் சுயநலச்சுழியிலும் மோகக்குழியிலுங் கிடந்துழல் கின்ற விஷயிகளுக்கும், முமுக்ஷுக்களுக்கும், முக் தர்களுக்கும் ஒத்தனுபவிக்கத்தக்கதும் மேன்மை யளிப்பதுமாயுள்ளது. இவ்வளவு சிறந்த ஒரு மஹா புருஷர் வாழுநாளிலே வாழவும், வசிக்கும் நாட் டிலே வசிக்கவும் பெற்ற பேறே பேறு. அவர் சந்நிதி யிற் காலங்கழிக்கும் பக்தர்களே புண்ணியவான்கள். பக்த பரமாணுக்களிலொரு பரமாணு ஆத்மார்த்தம் சமர்ப்பிக்கு மிந்நிவேதனத்தில், குறைபாடுகளோ, பாகதோஷமோ, ருசிக்கேடோ நேர்ந்திருந்தால்,

“ ஹரியென்றரிசியிற் சிறிதுங் குறிக்கு மறி வில்லாச் சிறுவர்செய்யும் பிழைகளனைத்தும் ஜகதீசா! கருணையாற் பொறுப்பாயாக.”

முக்தரான மகர்ஷி சரிதம் ஒரு ஜீவ சரிதமன்று; சமஷ்டியான ஆத்ம (சைதந்நிய) ப்ரகாசமே. சரீர சேட்டைகளன்று; சரீரியின் லீலைகளே.

[ப்ரபுத்த பாரதம்]

Koviloor Digital Library

SRI RAMANASRAMAM

Printed at
The Sunday Times Press,
G. T., Madras.